THE BOOK OF

# OPERATION OSTARA - MICHAEL LOVE

- வட கரோலினா - US

- தமிழாக்கம்: திருமதி : அருணா தேவேந்திரன்

நண்பர்களே!

நீங்கள் வாழும் பூமி... அதன் பழைய சித்தாந்த நம்பிக்கைகளுடன் இருக்கும் "மூன்றாவது தளத்தை" விட்டு... உயர்ந்த அதிர்வெண் சக்திகள் நிறைந்த புதுமையான "ஐந்தாவது தளத்திற்கு" நகர்கின்றது. இந்த இனிய தருணத்தில் திடமான உங்கள் அனைவருக்கும் எங்களின் நல்வாழ்த்துக்கள்!

உங்கள் கண் முன்னே கண்கூடாக நடக்கும் விளையாட்டுக்கு சாட்சியாக இருக்கும் நீங்கள் அனைவரும் உங்கள் உள்திறமைகளை வெளிக்கொணர வேண்டும் மற்றும் பெரும் மாற்றம் உருவாகும் இந்த நேரத்தில் கற்பனைக்கு எட்டாத குழப்பத்தை எதிர்கொள்ள வேண்டும். உங்களால் அதை எதிர்கொண்டு செய்ய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்!

நீங்கள் விடாப்பிடியாக இருந்தால்தான் எல்லா குழப்பங்களும் எவ்வளவு நாடகமாக நிகழ்ந்ததோ அதே நாடகமாக முடிவடையும். இந்த உலகில் வாழும் மனித சமுதாய முழுவதும் ஐந்தாவது தள பூமியில் குடியேறுவதை உங்கள் கண்கள் பார்க்கும்! இது நம்ப முடியாத உண்மை! கருணை உள்ள ஒளி உலக வாசிகள் பூமி மீது நடக்கும் இந்த பரிசோதனைக்கு " OPERATION OSTARA" என்று பெயர் சூட்டினார்கள். "Ostara" என்றால் "Signals of New Life".

இந்த பரிசோதனையின் மூலம் பூமியில் ஏற்படும் முன்னேற்றங்களை உன்னிப்பாக கண்காணித்து அவரவர்களின் நட்சத்திர வழிகாட்டிகள் மூலம் அவ்வப்போது அனைவருக்கும் தங்கள் உதவிகளை வழங்குகிறார்கள்!
அவர்கள் இறுக்கமான கட்டுப்பாட்டின் கீழ் இந்த "Operation Ostara" மூலம் தெய்வீக ஸ்ரீ சக்தி அதிர்வுகளை அதாவது "Exactic Devine Energy waves" உடன் இந்த பூமியை மூழ்கடிக்கும் ஐந்தாவது தளத்தின் மனித பரிணாம செயல்முறைக்கு அடித்தளமிட்டனர்.
இந்த சந்தர்ப்பத்தில் பூமி சூரிய மண்டலத்திலிருந்து செயலாற்றும் ஒளி உலக வாசிகளின் நெறிமுறையைப் பின்பற்றி பூமியில் "Lion Gate Portal" எனும் புதிய ஆற்றல் நுழைவாயிலைத் திறந்தனர்.
இதனால் ஒரு பெரிய அளவு ஸ்ரீ சக்தி அதிர்வுகள் மற்றும் Birthing Energy Vibration பூமியை வெள்ளத்தில் ஆழ்த்துகிறது! பூமியைச் சுற்றியுள்ள ஈதெரிக் பகுதிகளிலிருந்து செயல்படும் பிற உயர் தளங்களின் ஆசான்கள் அந்த ஆற்றல் ஓட்டங்களின் ஒழுங்கு முறைகளை கண்காணித்து வருவதால், அவற்றின் மோதலுக்கு நீங்கள் பயப்படத் தேவையில்லை.
அறிவார்ந்த தகவல்களால் நிரம்பியுள்ள இந்த ஆற்றல் ஓட்டம் "Etheric Coding System"( ECS ) மூலம் உங்கள் உடலில் DNA ஐ விரிவாக மறுசீரமைக்கிறது. உங்கள் நட்சத்திர உலக முன்னோர்களின் மரபணு தகவல்களுடன் உங்களை இணைக்கிறது.

பிளேடியன்ஸ்' மற்றும் 'ஆர்க்கிடோரியன்ஸ்' என்று அழைக்கப்படும் நட்சத்திர உலக வாசிகளின் தலைமையில் ஒளி உலக வாசிகள் இணைந்து கூட்டாக மேற்கொள்ளப்படும் இந்த குணப்படுத்தும் செயல்முறைகள், வரும் காலத்தில் மேலும் விரிவடைந்து பூமியின் ஏற்ற (Ascension) செயல்முறை முடியும் வரை தொடரும்.

இந்த சந்தர்ப்பத்தில் பூமியின் முதல் நட்சத்திர விதைகளான (Original Star Seeds) ஆர்க்கிடோரியன்கள் உங்களுக்காக சில ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

உயர் நிலையில் உள்ள நீங்கள் அனைவரும் உங்கள் முழுமையான ஆன்மிக சுதந்திரத்துடன் உங்கள் தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் படைப்புத்திறன்களை நோக்கிச் செல்லும் உங்கள் கவனத்தை பாராட்டுகிறோம். இப்படி உங்களுடன் நீங்கள் இருந்து, உங்கள் ஆன்மாவை நீங்கள் வளர்ப்பதன் மூலம், உங்களை நீங்கள் வளர்த்துக் கொண்டு... மற்றவர்களிடமும் உங்கள் நட்புக் கரத்தை நீட்ட முடியும்.

பூமியில் நடக்கும் இந்த Operation Ostara காரணமாக உங்களுக்கு கிடைக்கும் இந்த சிறப்பான நேரம், உங்களை நீங்கள் ஒளி உடல் நிரம்பியவர்களாக அடையாளம் காண ஒளியுலகவாசிகள் தந்த சிறந்த பரிசு ஆகும்.

'டெர்ரா' என்று அழைக்கப்படும் இந்த பூமி மற்றும் பூமியில் இருக்கும் நீங்கள் அனைவரும் இந்த 'பரந்த பிரபஞ்ச படைப்பின் அற்புதங்களாக' நாங்கள் காண்கிறோம். ஆகையால் இந்த அற்புதங்கள் அவற்றின் சரியான உயர்ந்த இடத்தில் இருக்க நாங்கள் உதவி செய்கிறோம்.

உண்மையில் இந்த கிரகம் அதில் உள்ள அனைத்து மனித இனத்தையும் சேர்த்து சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு உயர்ந்த தளத்தை அடைய வேண்டியிருந்தது. இதற்காக பிரபஞ்ச உறுப்பினர்களால் உலோக ஆற்றல், மின்சாரம், அணுசக்தி, கணினிகள், மின்னணு ஊடகங்கள் போன்ற பல வாய்ப்புகள் உங்களுக்கு வழங்கப்பட்டன.

ஆனால் சில தீய சக்திகளால் அந்த வாய்ப்புகள் அனைத்தும் உங்களுக்கு எதிராக மாறி, உங்கள் பொறுமையை சோதித்தது. எனவே இந்த கடைசி வாய்ப்பில் நாங்கள் களத்தில் இறங்கி, இருண்ட சக்திகளின் விளையாட்டை நிறுத்தி, இந்த அசென்ஷன் செயலில் உங்களுக்கு நாங்கள் உதவி செய்கிறோம்!

இதுவரைக்கும் நாம் நினைத்த மாதிரியே எல்லாம் சுமூகமாக நடக்கிறது! இனி வரப் போகும் முடிவு (கிளைமாக்ஸ்) இன்னும் வலிமையானதாக (பவர்ஃபுல்லாக) இருக்கும். எனவே நீங்கள் இன்னும் கவனமாக இருக்க வேண்டும்!

Lion Gate Portal மூலம் பூமிக்கு வரும் ஸ்ரீ சக்தி அதிர்வுகளை நீங்கள் விழிப்புணர்வுடன் பெற்று, உங்களின் தனிப்பட்ட ஆற்றலை வலுப்படுத்த வேண்டும். இது எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரமே தவிர, வீதி அடைய வேண்டிய அவசியம் இல்லை!

எனவே ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! இதுவரை நடந்தவை அனைத்தும் நன்மைக்கே! இனி நடக்கப் போகும் அனைத்தும் நன்மைக்கே! பயத்தை விடுங்கள்! 'டெர்ரா' எனப்படும் உங்கள் பூமி நீங்கள் இங்கு இருக்கும் காலம் வரை உங்களை ஈன்ற தாயைப் போல காப்பாற்றும்!

உங்களுடன் இங்கு வாழும் பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாருங்கள். அந்த குழந்தைகள் எல்லாம் அவர்கள் பிறந்தது முதல் தங்கள் அளவற்ற அன்பினால் இந்த பூமியை குணப்படுத்துகின்றனர். அவர்கள் தங்கள் ஆன்ம பலத்துடன் நீங்கள் வாழும் இந்த பூமியின்மீது ஐந்தாவது தளத்தில் வாழப்போகும் தெய்வீக மனிதர்கள்!

இந்த உண்மையை உணர்ந்து நீங்கள் அனைவரும் தெய்வீக ஸ்ரீ சக்தி அதிர்வுகளுடன் உங்களை இணைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். நட்சத்திர விதைகளான உங்கள் ஞானமும், உங்கள் வழிகாட்டுதலும் இந்த உலகுக்கு இப்பொழுது மிகவும் அவசியம். எனவே உங்கள் முன்னோர்களான பிளேடியன்களுடன் இணைந்து இருங்கள்.

உங்களைச் சுற்றி நடக்கும் நாடக நிகழ்வுகளில் சிக்கிக் கொள்ளாமல் உங்களை நீங்கள் நிலைநிறுத்திக் கொள்ளுங்கள். "எல்லாம் நன்மைக்கே" என்பதை ஒவ்வொரு நொடியும் உங்களுக்கு நீங்கள் நினைவூட்டுங்கள்! தன்னலமற்ற அன்பின் அதிர்வுகளை உங்கள் சந்திக்கேற்ப பூமிக்கு அனுப்புங்கள்.

இந்த சிறந்த நேரத்தில் நீங்கள் விரும்பியதை, விரும்புவதைச் செய்யுங்கள்! மற்றவர்களின் விருப்பத்திற்கேற்ப நீங்கள் செயல்படத் தேவையில்லை. மற்றவர்களின் அங்கீகாரத்திற்காக வாழும்வரை வலி மற்றும் துன்பம் தவிர உங்களுக்கு வேறு குறை எதுவும் இல்லை என்பதை உணருங்கள்.

துன்பத்தால் உங்களின் ஆற்றல் அளவு குறைந்து, குறுகிய காலத்திலேயே எல்லாவித நோய்களுக்கும் ஆளாக நேரிடும். எனவே உங்கள் இயற்கையான உள்ளுணர்வின்படி வாழுங்கள்! எல்லையற்ற அன்பு மற்றும் மகிழ்ச்சியுடன் உங்கள் வாழ்க்கையை நிரப்புங்கள்!

இதுவரை உங்கள் 3D பூமியில் கற்பிக்கப்பட்டுள்ளபடி நீங்கள் கடவுளின் குழந்தையோ அல்லது கடவுளின் அம்சமோ இல்லை. நீங்களே கடவுள்! உங்களைத் தவிர வேறு கடவுள் இல்லை! இந்த உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள், கடவுளைப் போல பொறுப்பாக வாழுங்கள்!

நீங்கள், அனைவருக்குள்ளும் இருக்கும் கடவுள் மற்றும் அனைத்திலும் நிரம்பி இருக்கும் இறைநிலை! சத்தியம் உங்களுக்கு தெளிவாக புரிதலிலும், அனுபவத்திலும் வரவேண்டும். இந்த புரிதல் உங்களுக்கு ஏற்பட்டால் நீங்கள் 3D பூமியை விட்டு 5D பூமியில் வாழ்கிறீர்கள் என்று பொருள். உங்களைப்போலவே உங்கள் அண்டை வீட்டாரும் தங்களுடைய சொந்த கர்ம திட்டங்களின்படி இந்த உண்மையை அறிந்திருக்கிறார்கள். எனவே அவர்கள்மீது உங்கள் கவனத்தை குறைத்து உங்கள் மீது உங்கள் கவனத்தை செலுத்துங்கள்.

வரவிருக்கும் புதிய ஒளி யுகம் முழுவதும் தெய்வீக ஸ்ரீ சக்தி அலைகளால் நிரம்பி இருப்பதால், எதிர்காலத்தில் நீங்கள் இன்னும் பெரிய அற்புதங்களைக் காணப் போகிறீர்கள்! உங்கள் கண் முன்னே சொர்க்க ராஜ்ஜியம் ஸ்தாபனை செய்யப்படுவதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்!

பூமியின் இந்த ஏற்ற ( Ascension) செயல்முறைக்கு நட்சத்திர விதைகளாக இருக்கும் நீங்கள், கடந்த பல ஆயிரம் ஆண்டுகளாக இந்த பூமிக்கு வந்து செல்கிறீர்கள். இந்த செயல்பாட்டில் நீங்கள் பல சிரமங்களை எதிர்கொண்டீர்கள். உங்களுடைய இந்த உழைப்பு வீணாகாது! இது மேலே உள்ள உலகங்களில் அங்கீகரிக்கப்பட்டு என்றென்றும் இருக்கும்.
இருண்ட சக்திகளின் பிடியிலிருந்து இந்த உலகத்தைக் காப்பாற்றும் வீரர்களான உங்கள் அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள்!

/ முற்றும் /
தமிழாக்கம் : திருமதி. அருணா தேவேந்திரன்
( "தியானப்பிரபஞ்சம்" இதழிலிருந்து )